(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO.136 /2020

DW 2

Name : Chinnadurai

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

04.08.2023.

முதல் விசாரணை

(மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் விசாரணை செய்யப்படுகிறார்)

எனது தகப்பனார் கருப்புசெஞ்சுநாயக்கர் அவர்களின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது பிவா.தசாஆ 26 ஆகும்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிவாதசாஆ 26 வட்டாட்சியர் நான் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் வழங்கியதாக அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விண்ணப்பம் செய்யும் சமயத்தில் எனது ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை மற்றும் மற்ற வாரிசுதாரர்களின் ஆதார் அட்டைகள் கொடுத்து சான்றிதழ் பெற்றேன். கருப்புசெஞ்சுநாயக்கர் இறப்பு சான்றிதழ் விண்ணப்பம் செய்த சமயத்தில் கொடுக்கவில்லை. எனது தாயார் சொன்னதை வைத்து அவர் 15/12/1969 ல் இறந்ததாக நான் விண்ணப்பம் செய்தேன். கருப்புசெஞ்சுநாயக்கர் எந்த தேதியில் இறந்தார் என்ற விவரத்தை எங்களது பதிலுரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நிலஅபகரிப்பு போலிசார் கருப்புசெஞ்சுநாயக்கர் குறித்த இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ் கோரி நான் கொடுக்கவில்லை என்று சொன்னால் அது போல் போலிசார் எதுவும் என்னிடம் கேட்க்கவில்லை. போலிசார் அது போல் கேட்டார்கள் என்றாலும் வழக்கிற்காக அது போல் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது பதிலுரையில் போலிசார் விவரங்களை கேட்டதாகவும் நான் கொடுத்துள்ளதாகவும்

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் போலிசார் கேட்ட உடனேயே பெற்றிருக்கலாம் என்று சொன்னால் போலிசார் என்னை கேட்க்கவில்லை வழக்கு போட்டபிறகு தான் அதற்காக விண்ணப்பித்தோம். வழக்கறிஞர் அறிவிப்பு வாதிதரப்பில் அனுப்பியவுடன் நாங்கள் பெற்றுக்கலாம் என்று சொன்னால் அதன் பிறகு தான் நாங்கள் பெற்றேன். நாங்கள் விண்ணப்பம் செய்து ஆறு மாதத்திற்கு மேலே ஆகிவிட்டது. சான்றிதழ் பெறுவதற்கான சூழ்நிலை எனக்கு சாதகமாக ஏற்பட்ட காரணத்தினால் அது போன்ற போலி ஆவணத்தை நான் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. காண்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் எண் 713 ல் உள்ளது எனது தாயார் ராஜம்மாள் ஆகும். அதில் அவரது கணவர் பெயரான செஞ்சுகான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டியல் வாதசாஆ 31 ஆகும். 2019 வாக்காளர் பட்டியலில் எண் 63 ல் எனது தாயாரின் கணவர் பெயராக செஞ்சுகான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வாதசாஆ 32 ஆகும். காண்பிக்கப்பட்ட 2023 வாக்காளர் பட்டியலில் எண் 660 ல் எனது தந்தை பெயர் செஞ்சுகான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வாதசாஆ 33 ஆகும். எங்களது நிலம் பொருத்த பட்டாவிலும் செஞ்சுகான் என எனது தகப்பனார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது போல் அவர் தவறாக கொடுத்துள்ளார்கள். நான் ஒரு பொய்யான ஆவணத்தை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

ஆறு மாதங்களுக்கு முன்பாக நான் பெற்ற வாக்காளர் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அது பிவாதசாஆ 27 ஆகும்.

குறுக்குவிசாரணை

இந்த வாக்காளர் அடையாள அட்டையும் வாரிசு சான்றிதழ் பெற்றது போல் தவறான விவரங்கள் கூறி பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.